

# ஒற்றுமையின் ஜெபம்

## சபைகளுக்கு அறிவிப்பு
17 ஏப்ரல் 2013

# 2013 பொது தேர்தல் (தேமு13)

## வாக்களிக்கும் நாளிலே ஜெபம் திரட்டுதல்: மே 5, 2013




வேட்புமனு வாக்களிப்பு திகதி இப்பொழுது அறிந்தியிருக்கிறோம். அதாவது ஏப்ரல் 20 மற்றும் மே 5.தேர்தலில் நாளின் இறுதி ஓட்டத்தில் ஒற்றுமையின் ஜெபம் எல்லா சபைகளிலும் செல் குழுகளும், மற்றும் பல்கலைக்கழக ஐக்கியங்களிலும் ஜெபத்தை திரட்டி இவ்வண்ணமாய் ஒருங்கிணைக்கும் படியாக உட்சாகப்படுத்துகிறோம்.

**ஏப்ரல் 28 (ஞாயிறு) –ஞாயிறு ஆராதனையில் ஜெபிக்கவும்.** ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் தேசத்திற்காகவும் பொதுத் தேர்தலுக்காகவும் ஜெபிக்கவும். வெவ்வேறு தொகுதிகளுக்கு இடத்திற்கும் சேவை செய்ய போகுவதற்கு முன்பாக உங்கள் சபையிலுள்ள PACA தொண்டர்களையும், வாக்களிப்பு பார்வையாளர்களையும், தேர்வு அதிகாரிகளையும், பாதுக்காப்பு படைகளையும் அடையாளம் கண்டு கொண்டு உத்தரவுவாதம் கொடுக்கவும்.

**ஏப்ரல் 29 (திங்கள்) மே 1(புதன்) வரை – ஜெப கூட்டங்கள், வாகனம் ஓட்டிக் கொண்டு ஜெபம், நடை ஜெபம்.** சபைகளும் ஜெப பிணையங்களும் அவர்களுடைய அங்கத்தினரை ஒன்றுக் கூட்டி 13 ஆவது பொதுத் தேர்தலுக்காக மாலை நேரம் குறைந்த பட்சத்தில் 1 மணி நேரம் ஜெபிக்கும் படியாக ஆலோசனைக் கொடுக்கிறோம். 24-7 துண்டிக்கப்படாத ஜெபங்களை செயல் படுத்த உட்சாகப்படுத்துகிறோம், .குறிப்பாக உங்கள் சபையிலும் அல்லது உங்கள் ஜெப அறையிலும். வாகனம் ஓட்டும் ஜெப மூலமாகவும், நடை ஜெப மூலமாகவும் உங்கள் தொகுதியில் ஜெபத்தால் நிரப்புங்கள். எல்லா தொகுதிகளிலும் பட்டணத்திலும் நகரத்திலும் ஒன்று கூடி, சபைகளின் ஜெப கூட்டங்களை செய்தால் இன்னும் நலமாக இருக்கும். உங்கள் பகுதியில் வேட்பாளராக நிற்கிறவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்காக ஜெபியுங்கள்.

**மே 2 (வியாழன்) மே 4 (சனி) வரை- 3 நாட்களாக 24-7 துண்டிக்கப்படாத உபவாச ஜெபம்.** 13 ஆவது பொதுத் தேர்தலுக்காக 3 நாள் 24-7 உபவாச ஜெபத்தை ஒருங்கிணைத்து திரட்டுங்கள். உங்கள் ஜெபத்திலே எல்லா மாநிலத்திற்கும் முழு தேசத்திற்கும் திட்டமிட்டு ஜெபியுங்கள். தேசத்திற்காக ஒரு ஜெப கவசத்தைக் கொடுங்கள்.

**மே 5 (ஞாயிறு)- ஞாயிற்றுக்கிழமை ஜெபம் அல்லது ஆணையிடுவது.** அங்கத்தினர் தங்களுடைய வாக்களிக்கும் பொறுப்பை நிறைவேற்ற அனுப்பப்படுவதற்கு ஆணையிடப்படுவதற்கு முன்பதாக சபை

தலைவர்கள் ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் 13 ஆவது பொதுத் தேர்தலுக்காக ஜெபிக்கும்ப் படி உட்சாகப்படுத்துகிறோம். சில கருத்துக்கள், சூரியன் உதிக்கும் ஆராதனை பிறகு உபவாசத்தை ஒன்றாய் முடிப்பது. காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரைக்கும் ஒருவருக்கொருவர் தேர்தல் முன்பும் தேர்தல் பிறகும் ஜெபிக்கவும்.

**மே 5 (ஞாயிறு) மாலை 6 மணிலிருநந்து மே 6 (திங்கள்) மதியம் 12 மணி வரை-** வாக்கு எண்ணும் நேரத்திலும் முடிவின் அறிவிப்பு நேரத்திலும் ஜெபம். தேர்வு முடிவுகள் பகுதி பகுதியாக வருகிற வேளையில் தொடர்ச்சியாக இராமுழுவதும், திங்கள் மதியம் 12 வரை ஜெபிக்கவும்.

### 2 நாளாகமம் 7:14

***என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி ,என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத்திரும்பினா ல்,அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்.***